**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 22.08.2023
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 8வது வேளாண் பட்டதாரி மாணவர்கள் கருத்தரங்கம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலகம், கோயம்புத்தூரில் ஆகஸ்ட் 22 மற்றும் 23, 2023 அன்று "8வது வேளாண் பட்டதாரி மாணவர்கள் கருத்தரங்கத்தை (AGSC) ஏற்பாடு செய்துள்ளது. இந்த கருத்தரங்கத்தின் கருப்பொருளாக "வேளாண் உலகமயமாக்கலில் உணவு, தீவனம் மற்றும் எரிபொருள்" தேர்வு செய்யப்பட்டு நடத்தப்படுகிறது.

முன்னதாக நடைபெற்ற துவக்கவிழாவில் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்ட புகழ்பெற்ற ஜேம்ஸ் மெக்கில் (கனடா) பேராசிரியர் முனைவர் விஜயராகவன், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் ராமசாமி, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் தமிழ் வேந்தன், முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலக முதன்மையர் முனைவர் ந.செந்தில், வேளாண் கல்லூரி முதன்மையர் முனைவர் ந.வெங்கடேச பழனிச்சாமி, ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி கருத்தரங்கத்தை தொடங்கி வைத்தனர்.

இதைத் தொடர்ந்து முதன்மையர் ந.செந்தில் பல்கலைக்கழகம் சார்பாக சிறப்பு விருந்தினர்களை வரவேற்று பேசினார். நிகழ்வின் சிறப்பு விருந்தினரான வாழ்நாள் சாதனையாளர் வேளாண் விஞ்ஞானி விஜயராகவன் சிறப்பானதொரு துவக்கவுரையை நிகழ்த்தினார். அவர் வேளாண்மையில் நவீனமயமாக்கலில் முக்கியத்துவத்தையும் ஒருங்கிணைந்த உணவு உற்பத்தியின் விஞ்ஞானிகள் மற்றும் வேளாண் மாணவர்களின் பங்கையும் விவரித்தார். இதனையடுத்து பேசிய முன்னாள் துணைவேந்தர் ராமசாமி

இக்கருத்தரங்கின் முக்கியத்துவத்தையும் வருங்காலங்களின் வேளாண்மைக்கான தீர்வுகளையும் பற்றி பேசினார். இதைத்தொடர்ந்து கருத்தரங்கத்தின் இதழ் வெளியிடப்பட்டது.

தலைமையுரை வழங்கிய வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி வேளாண்மையின் முக்கியத்துவம், இந்த நூற்றாண்டுக்கான வேளாண் முன்னெடுப்புகள், இக்கருத்தரங்கத்தின் சிறப்புகள், பல்கலைக்கழகம் மற்றும் மாணவர்களின் சாதனைகள் பற்றியும் உரை நிகழ்த்தினார். மேலும் பேசிய அவர், முதுநிலை மற்றும் முனைவர் பட்ட மாணவர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகைகள் பற்றியும், உலகெங்கிலும் உள்ள பல்வேறு வேளாண் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து நடத்தப்படுகின்ற ஆய்வுகள் பற்றியும் பேசினார்.

உலகெங்கிலும் உள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களில் இருந்து புகழ்பெற்ற விஞ்ஞானிகள் மற்றும் பேராசிரியர்களான தெற்கு டகோட்டா மாநில பல்கலைக்கழக (அமெரிக்கா) தாவர அறிவியல் துறை பேராசிரியர் முனைவர் செந்தில் சுப்ரமணியன், SV வேளாண்மைக் கல்லூரி (திருப்பதி) இணை முதன்மையர் முனைவர் ஜி.பிரபாகர ரெட்டி, Corteva Agriscience, ஹைதராபாத் முனைவர் எட்வின் ரோக்பெல் ஜெயசிங், Renewable Cogen Globe – EECC தலைமை நிர்வாக அதிகாரி முனைவர் பாலசங்கரி பால்காட் கிருஷ்ணன் மற்றும் சுல்தான் கபூஸ் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் முனைவர் ஹமீத் சுலைமான், ஆகியோர் பங்குபெற்று மாணவர்களுடன் தங்கள் அறிவையும் அனுபவங்களையும் பகிர்ந்தனர். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் வெவ்வேறு துறைகள் மற்றும் மாநில கல்லூரிகளிலிருந்து வந்திருந்த முதன்மையர்களும் துறைத்தலைவர்களும் கலந்துக்கொண்டனர். அனைவருக்கும் மலர்செண்டும் நினைவுப்பரிசும் அளித்து கௌரவிக்கப்பட்டது.

நிகழ்வின் நிறைவாக முனைவர் பட்ட மாணவி கிருத்திகா நன்றியுரை வழங்கினார்.

வெவ்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மொத்தம் 1320 பங்கேற்பாளர்களும், விவசாயத் துறையில் முன்னணி விஞ்ஞானிகளும் நிபுணர்களும் இந்த நிகழ்வில் பங்கேற்று தங்கள் பங்களிப்பைச் செலுத்துகிறார்கள். இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்பான 460 சுவரொட்டி விளக்கக்காட்சிகளும் 70 வாய்வழி விளக்கக்காட்சிகளும் அடங்கும். ஒவ்வொன்றும் புதுமையான ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் மற்றும் விவசாயத்தின் உலகமயமாக்கலால் ஏற்படும் பன்முக சவால்களை எதிர்கொள்ளும் புதுமையான தீர்வுகளை உள்ளடக்கியது. மேலும், உலகமயமாக்கப்பட்ட விவசாயத்தில் உணவுப் பாதுகாப்பு, தீவன உற்பத்தி மற்றும் நிலையான எரிபொருள் முதலிய காரணிகளின் தாக்கங்களையும் சிக்கலான அதன்போக்குகள் பற்றி ஆராயும் ஆய்வுகளையும் முன்னிறுத்தியுள்ளது.

***மக்கள் தொடர்பு அலுவலர்***